பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஞூ மாசி மீ 3 உ. வெள்ளிக்கிழமை (15-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 80

## நவக்கிரியில் மூவர் காயம்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றிரவு 10 மணியளவில் ஏவிவிடப்பட்ட ஷெல் ஒன்று புத்தூர் மேற்கு நவக்கிரியில் வீடொன்றின் மீது விழுந்து வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

எஸ். தர்மரட்ணம் (வயது 29) அவரது மனைவி இ. யாக்கினம் (வயது 28), அவர்களது மகனான ரமேஷ் (வயது 10) ஆகியோரே காயமுற்றனர்.

இவர்களில் ரமேஷ் படுகாயமடைந்துள்ளார்.

மூவரும் நேற்று நள்ளிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர். (க-3)

## திட்டங்கள் செயற்படுத்தப்படாததால்

# வடக்கு, கிழக்கிற்குரிய புனரமைப்பு நிதி வாபஸ்?

## உதவி வழங்கும் நாடுகள் முடிவு

கொழும்பு, பெப்ரவரி. 15

வடக்கு, கிழக்கில் புனரமைப்பு வேலைகளுக்கு என ஒதுக்கப்பட்ட நிதியின் பெரும்பகுதி உபயோகிக்கப்படவில்லை; புனரமைப்புத் திட்டங்களும் செயற்படுத்தப்படவில்லை. இதனால் இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கிய நிதியைத் திருப்பிப் பெறப் போவதாக உதவி வழங்கும் நாடுகள் முடிவு செய்திருப்பதாக அறியவருகிறது.

1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சேதங்களைத் திருத்தி, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள இந்த நாடுகள் 50 கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா) வழங்கியிருந்தன.

மூன்றாண்டு காலத்தில் இந்தப் புனரமைப்பு வேலைகள் முடிக்கப்படவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இதன்படி புனரமைப்பு வேலைகள் 90 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முடிந்திருக்க வேண்டும். ஆனால் முடிவுறாததால் 91 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை கால எல்லை நீடிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இந்த வேலைகளை பூர்த்தி செய்யாவிட்டால் உதவிநிதியை திரும்பப் பெறப் போவதாக அந்த நாடுகள் இலங்கைக்கு தெரிவித்திருக்கின்றன.

வழங்கப்பட்ட உதவியில் 13 கோடி டொலர்கள் மட்டுமே இதுவரை செலவிடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வவுனியா மோதல்:

## 50 பொதுமக்களும் 19 படையினரும் பலி!

லண்டன், பெப். 15

கடந்த திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை வவுனியாப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 70 பேர் வரை உயிரிழந்தனர் என்றும்—

அவர்களில் பெரும்பாலானோர் பொது மக்கள் என்றும் ஸ்ரீலங்கா அரசு அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இதற்கிடையில்—

வவுனியாச் சண்டையில் 19 படையினர் உயிரிழந்தனர் என்று ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் சொன்னதாக இந்திய வானொலி தெரிவித்தது. (உ-எ-3)

## ஊர்வலம் நடத்த அரசாங்கம் தடை

இம்மாதம் 19 ஆம் திகதி நுகேகொடையில் அன்னையர் முன்னணி நடத்தவுள்ள பொதுக்கூட்டத்தை ஒட்டி, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இத் தகவலை நேற்று வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

எனினும், நுகேகொடையில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதியளிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்.

எந்த அரசியல் கட்சியும் பொதுக்கூட்டங்கள் நடத்தவும் ஒலிபெருக்கிகளைப் பாவிக்கவும் "பிக்கெட்டிங்" நடத்தவும் அனுமதியளிப்பது என்று அரசு தீர்மானித்துள்ளது.

ஆனால் எக்காரணங்கொண்டும் ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்த அனுமதியளிக்கப்படமாட்டாது—என்று அமைச்சர் மேலும் சொன்னார். (ஒ-எ)

## முல்லைத்தீவு ராணுவம் முகாமுக்குள் முடக்கம்

## ஆனால் ஷெல் அகோரம்

முல்லைத்தீவு இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்குள் முடங்கிக் கொண்டுவிட்டனர் என்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் மாலை முகாம் திரும்பிய இராணுவத்தினர், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி விடாது அகோர ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி பகுதிகளில் அடுத்தடுத்து பல ஷெல்கள் விழுந்து வெடித்தன. இதனால் இப்பகுதிகளில் வீடுகள் பல சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## 6 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப்: 15

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அறுவர் வீரமரணமடைந்தனர்.

மேஜர் ஜோன்சன் (இராசா இராசேந்திரன் - திருகோணமலை), கப்டன் லெனின் (நெடுங்கேணி), அசோக், அலெக்ஸன், றிச்சர்ட், அச்சுதன் ஆகியோரே வீரமரணமடைந்தனர். (உ)

## இலங்கையில் பணிபுரிய இந்திய, பாக். டாக்டர்கள்

கொழும்பு, பெப். 15

நாட்டில் நிலவும் வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறையை நீக்க இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வைத்திய நிபுணர்களைத் தருவிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டில் பணிபுரிய 2 ஆயிரம் டாக்டர்கள் தேவை என்றும் ஆனால் தற்சமயம் 900 வைத்திய நிபுணர்களே பணிபுரிகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஈ)

## முச்சந்தி முரளி



இங்கை மருந்துக்குத் தடை? அங்கை டாக்டர்கள் இறக்குமதி...... என்ன கூத்து இது...?

## யாழ். பல்கலைக்கு அதிக மாணவர் அனுமதி

## வெட்டுப்புள்ளி குறையும்

யாழ்ப்பாணம், பெப்: 15

புதிய கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அதிக மாணவர்களை அனுமதிப்பது என தற்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1989 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கே கூடுதல் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஜனசக்தித் திட்டத்துக்கு உலக வங்கி நிதி தராது

கொழும்பு, பெப். 15

அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் ஜனசக்தித் திட்டத்துக்கு உலக வங்கி நிதி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது. அதனால் பிரஸ்தாப திட்டத்தை செப்டம்பர் மாதத்துடன் நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக மிகவும் நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

இலங்கை முழுவதிலும் 56 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மட்டும் ஒரு லட்சத்து 57 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜனசக்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு அதற்கு நிதி வழங்குமாறு அரசு உலக வங்கிக்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால் தன்னால் உதவமுடியாது என உலக வங்கி கைவிரித்துவிட்டது.

அதைத் தொடர்ந்து அரசின் முழு வளங்களையும் பயன்படுத்தி எதிர்வரும் செப்டம்பர் மாதத்துடன் இந்தத் திட்டத்தை நிறுத்துவதென அரசின் திட்டமிடல் கொள்கை வகுத்தல் அமைச்சு முடிவு செய்துள்ளது. (அ-3)

## ஆனையிறவு இராணுவம் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 15

ஆனையிறவு இராணுவத்தினர் [illegible] ஷெல் தாக்குதல்களை நடத்தினர் [illegible] தொடர்ந்தது. (ஒ-15)

## ஈழப் போராளிகள் பற்றி தகவல் கிடைத்ததாம்

## சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்

சென்னை, பெப்: 15

"தமிழகத்தில் சட்டம், ஒழுங்கைக் குலைக்கும் விதத்தில் ஈழப்போராளிகள் செயற்பட்டு வந்தனர் என்பது பல்வேறு புலனாய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னரே தமிழக அரசைக் கலைத்தோம். அது பற்றிய விவரமான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்."

— இந்திய சட்ட, வர்த்தக அமைச்சர் திரு சுப்பிரமணிய சுவாமி மேற்கண்டவாறு கூறினார். நேற்று சென்னை வந்த அவர் அங்கு வைத்து பேட்டியளித்தார்.

"இந்தியாவில் மற்றைய

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாள் ஒன்றுக்கு ஒரு போத்தல் தரக்கூடிய நல்ல இனத்து இரண்டரை மாத கிடாய்க் குட்டிகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிற்றம்பலம், பண்ணாலை, தெல்லிப்பழை. (15836)

### 'நிலவே நீ மயங்காதே''

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எழுதிய துடிக்கும் மென்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை நாவலில் சந்தியுங்கள். தர்க்கா ஸ்ரேசனேர்ஸ், கன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீ சாந்தி புத்தகசாலை, நல்லூர் விரைவில் ''அமாவாசை நட்சன்''. (15827)

### தேவை

Typeriteres தமிழ் - ஆங்கில பழைய புதிய தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. Fudo: 39/17 மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஸ் நிலையம் முன்பாக). (இ/5758)

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு உள் வேலை, வெளி வேலை செய்யக்கூடிய பல வேலைக்கு ஒருவர் தேவை. கோவில் வேலை அனுபவம் உள்ளவர் விரும்பத் தக்கது. வயது 25க்கும் 40க்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். உடனடியாக நேரில் வரவும் தர்மகர்த்தா. (15816)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும். FUDO: 39./17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5744)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனுக்குடனாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கந்தர்மோடை புதிய ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15798)

### WANTED

M B B S Doctor for a Private Hospital in Jaffna. Apply Immediately to the Medical Officer In Charge Central Nursing Home 350, Palaly Road, Thirunelvely. 15845.

### ராமகிருஷ்ணர் பிறந்த நாள்

யாழ்ப்பாணம், பெப். 15 பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறந்தநாள் விழா நாளை சனிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் கொண்டாடப்படும்.

காலை 5 30 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகி சிறப்பு பூஜை, பஜனை, ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகளைக் கூட்டாகப் படித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் மாலை 5 30 மணி வரை தொடர்ந்து இடம்பெறும். (அ)

# O/L MATHS PAPER CLASS

(சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)

ஆரம்பம்- 16 - 02 - 1991 சனி பி. ப. 4. 30 மணி

(பகுதி I, பகுதி II, வினாத்தாள்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் வழங்கப்பட்டு செய்து காண்பிக்கப்படும்.)

(April 91, December 91 மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

Tutor- Mr V. T. RAJENDRA

விவரங்களுக்கு- ஸ்ரார் அரியாலை

ஸ்ரான்லி கல்லூரி அருகில் (15839)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## மா. தாமோதரம்பிள்ளை

(Raw Miller - K. K. S. Cement Factory)

எம் இதய தீபமே!<br>
எம் குடும்ப ஒளிவிளக்கே!<br>
எம்மை வழிநடத்திய அன்புத் தந்தையே!<br>
உமது ஆத்மா சாந்தியடைய<br>
இறைவனை வேண்டுகின்றோம்.

10 ஆம் கட்டை, ஆவரங்கால். மனைவி, பிள்ளைகள். (15844)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தசாமி ஜெகநாதன் (ஜெகநா) அவர்கள்



தோற்றம்: 1958 - 12 - 19

மறைவு: 1990 - 02 - 26

திதி: 1991 - 02 - 15

அகிலமே நாளும் போற்றும்<br>
அன்புளம் பூண்ட அண்ணால்!<br>
ஆதுலர்க் கென்றும் அன்னம்<br>
அன்புடன் படைத்தவன் பிரே<br>
இயல்பெழில் மிளிரிய வளைக்காட்டு<br>
விநாயகர் ஆலயத் திருந்து<br>
ஈர்வளம் கொழிக்கும் வற்றாப்<br>
பளைக்கு நல் வைண்டு தோறும்<br>
உவப்பொடு காவடி யெடுத்தே<br>
ஊர்வலஞ் செல்வீர்; அந்தோ!<br>
ஊரவர் உவந்தொரு ங்கே<br>
போற்றுவர் ஏத்துவர்; புகழ்வார்<br>
என்றுமங் கனையே எண்ணி<br>
ஏங்கியாம் வாழ்கின் றோமே!<br>
ஏதிலார் உமக்கிங் கில்லை<br>
என்பதை அறிவார் மக்கள்<br>
ஐயமென் றணுகு வோர்க்கு<br>
வள்ளலாய் அளிப்பீர் அன்பாய்;<br>
ஒவ்வொரு நாளும் வல்லி<br>
புரத்தனை வணங்கி நிற்பீர்<br>
ஓதுவர் அன்ன தானம்<br>
செயுந்திறன் உரைக்கப் போமோ?<br>
ஔவியம் பேசா வையம்<br>
ஒன்று மிபரைப் பெண்பீர்<br>
அஃதலைக எங்கள் கண்ணீர்<br>
அஞ்சலி உமக்கே யாக!!<br>
ஓம் சாந்தி!

இராணி மில், நெல்லியடி, செல்வம் மில், [illegible] மனைவி, பிள்ளைகள், தந்தை, தாய். (15814)

# லொறி உரிமையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன உரிமையாளர் சங்கக் கூட்டம் 16 - 02 - 1991 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதில் போக்குவரத்துச் சம்பந்தமான பல முக்கியமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. சகல லொறி உரிமையாளர்களும் தவறாது சமூகமளிக்கவும். சமூகமளிக்கத் தவறும் உரிமையாளர்களின் லொறிகள் சேவையில் ஈடுபடுவது தடை செய்யப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

இப்படிக்கு,<br>
வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன உரிமையாளர் சங்கம்.

(15837)

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

O/L வினாவிடை வகுப்பு

## SAT & SUN CLASSES

( 8-00 a.m — 2-00 p.m )

புதிய பிரிவு ஆரம்பம்: 16-02-91

[C/5759]

யாழ் பல்கலைக்கழக லிகிதர் பதவி போட்டிப் பரீட்சைக்கான

# விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: நுண்ணறிவு (I. Q.)

- ★ தொடர்ச்சியாக 10 தினங்கள்
- ★ நாளாந்தம் 2 மணித்தியாலங்கள்
- ★ இலவச பாடக் குறிப்புகள்
- ★ 1 மணித்தியாலத்திற்கான கட்டணம் ரூபா 10/- மட்டுமே

ஆரம்பம்: 16 - 02 - 91 முற்பகல் 9 மணி

● வகுப்புகள் யாவும் எமது கிளை நிறுவனத்தில் நடைபெறும்.

கிளை: Astan English Academy, 125, அரசடி வீதி, கந்தர்மடம்.

விபரங்களுக்கு: நேரில் பிற்பகல் 2.00 — 5.30 வரை

## ASTAN INSTITUTE (Branch)

125, Arasady Road, Kantharmadam.

(கந்தர்மடம் சந்திக்கண்மையில், (இ-5742)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கிருஷ்ணசாமி சறோஜினிதேவி



மலர்வு:- 16 - 12 - 1942

உதிர்வு:- 16 - 01 - 1991

அன்பிலே சிறந்து பழகும் பண்பிலே உயர்ந்து அறிவுடைய நல்லவராயும், குடும்பத்தின் குலவிளக்காகவும் உலகத்தோர் மெச்சிட வண்ணம் வாழ்ந்த நீங்கள் தரணியில் மறைந்த நாட்கள் முப்பது கழிந்தேனம்மா. இந்நாட்களை வாழ்ந்தாலும் எங்கள் இதயச் செடியில் - என்றும் உதிராத மலராகி விட்டீர்களே அம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய அகிலாண்டேஸ்வரியைத் துதி செய்யும் அன்னை கண்ணகியை அனுதினம் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்: கணவன், மக்கள், சகோதரர்கள்.

கோவில் வீதி, யாழ்ப்பாணம். [15841]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வியை ரத்துச் செய்ய சர்வதேச நாணயச் சபை கோருமா?

## 45 கோடி டொலர் கடனுக்கு கடும் நிபர்தனை

கொழும்பு, பெப். 15 சர்வதேச நாணயச் சபையிடமிருந்து 45 கோடி டொலர்களை இலங்கை கடனாகப் பெற இருக்கிறது. இந்தக் கடனுக்கான நிபந்தனைகளில் ஒன்றாக இலவசக் கல்வித் திட்டத்தை ரத்துச் செய்யக் கோருவதும் ஒன்றாக இருக்குமாம்.

இப்படி கொழும்பில் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அரச திணைக்களங்களில் பணியாற்றுபவர்களைக் குறைப்பது, உணவு, எரிபொருள் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் மீதான மானியங்களை அகற்றுதல் ஆகிய உறுதிமொழிகளை வழங்கியே முன்னர் இலங்கை சர்வதேச நாணயச் சபையிடம் இருந்து 18 கோடி 70 லட்சம் டொலரை கடனாகப் பெற்றது.

தற்போது புதிய கடன்களை வழங்குவதற்கு இலவசக் கல்வித் திட்டத்தை ரத்துச் செய்வது உட்பட பல கடுமையான நிபந்தனைகளை சர்வதேச நாணயச் சபை விதிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (இ-எ)

## கிளிநொச்சி பகுதியில் அறுவடை ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 15 கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடை தற்போது ஆரம்பமாகி உள்ளது.

அறுவடையின்போது ஏக்கருக்கு உரிய விளைச்சல் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

போதிய பசளை, மருந்து வகைகள் இல்லாமையாலேயே விளைச்சல் குறைவாக உள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒரு மூட்டை நெல் ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. அறுவடை உச்ச கட்டத்தை அடையும்போது நெல்லின் விலை வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந 76)

## பாடசாலை இடமாற்றம்

மூன்று தடவைகள் பொம்மர் தாக்குதல்களினால் சேதமடைந்த வேலணை சரஸ்வதி வித்தியாசாலை தற்போது வேலணை கோட்டக் கல்வி அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. (இ)

## அமைச்சர்கள் பதவி நீடிப்பை எதிர்த்து வழக்கு

எம்.பி. பதவிகளை இழந்த வெளியுறவு அமைச்சர் உட்பட ஐந்து மத்திய அமைச்சர்கள் தொடர்ந்து பதவியில் இருப்பதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட பொதுமனு ஒன்றை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு அனுமதித்தது.

இந்த அமைச்சர்கள் பதவியில் நீடிப்பதைத் தடுக்க இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்படி இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. சென்னை நகர வழக்கறிஞர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

## தாரீக் அஸீஸ் மாஸ்கோவுக்கு

★ ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்ப்பச்சேவைச் சந்திக்க மாஸ்கோவுக்குச் செல்கிறார்.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனைச் சந்தித்த பின்னர் திரு. கோர்ப்பச்சேவின் சிறப்புத் தூதர் [illegible] தகவலை வெளியிட்டார்.

## ஜோர்தானில் 3 நாள் துக்கம்

பாதாள நிலஅறை ஒன்றை பன்னாட்டுப்போர் விமானங்கள் தாக்கியதில் உயிரிழந்த பொதுமக்களின் நினைவாக மூன்று நாள் துக்கதினம் அனுஷ்டிக்கப் போவதாக ஜோர்தான் அரசு நேற்று அறிவித்தது. இந்த பாதாள அறை பக்தாத் நகரில் பாடசாலை, பள்ளிவாசல் ஆகியவற்றின் அருகில் அமைந்திருந்தது.

## சொந்த மக்களையே ஈராக் அழிக்கிறது என்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், பெப் 15 இராணுவ பாதாள நிலஅறையில் பொதுமக்களைத் தங்க வைப்பதன் மூலம் தனது சொந்த மக்களையே ஜனாதிபதி சதாம் ஹுசேன் கொன்று வருகிறார் என்று அமெரிக்கா நேற்று குற்றஞ்சாட்டியது.

பக்தாத்தில் உள்ள பாதாள நிலஅறைமீது பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று வெளியான செய்திகள் பற்றி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்சேனி முன்கண்டவாறு தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் ஈராக், குவைத் மீதான போர் விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படமாட்டா என்றும் தரைத் தாக்குதல் ஆரம்பமாகும் வரை அவை தொடரும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் மேலும் சொன்னார்.

தாக்குதலுக்குள்ளான பாதாள நிலஅறை ஈராக்கிய இராணுவக் கட்டுப்பாட்டு அறை என்பதில் சந்தேகமே இல்லை என்றும் — இதனை பக்தாத் அதிகாரிகள் இராணுவ நோக்கங்களுக்கும் பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் பயன்படுத்தி வந்தது தமக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும் அமெரிக்க அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையில் பாதாள அறைத் தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குவிலர் கவலையும், அதிர்ச்சியும் தெரிவித்தார்.

## வியாபாரி திரும்பும்வரை குடும்பத்தினர் பணயம்!

புங்குடுதீவு, பெப் 15 தொழிலின் நிமித்தம் நீண்ட நாட்கள் வெளியே சென்றிருந்தவர் வீடு வந்து சேர்ந்ததும் அவரை கைது செய்ய முயன்றனர் படையினர்.

விஷயமறிந்த சம்பந்தப்பட்ட நபர், வீட்டுக்கு வந்ததும் வராததுமாக ஊரிலே இல்லாமல் தப்பித்துச் சென்று விட்டார்.

அவர் தப்பிச் சென்ற இரு மணி நேரத்தில் அவரைத் தேடிச் சென்ற படையினர் குறிப்பிட்ட நபரின் வீட்டை முற்றுகையிட்டனர். அவர் வீட்டுக்கு வந்துவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டார் என்பதை அறிந்து வீட்டில் உள்ள மற்றவர்கள் வெளியே செல்ல முடியாது எனத் தடுத்து வைத்துள்ளனர்.

38 வயதான சம்பந்தப்பட்ட நபர் தம்மிடம் சரணடையும்வரை அவரின் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனராம்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை நயினாதீவில் இடம்பெற்றது. சம்பந்தப்பட்ட நபர் ஒரு வியாபாரி. தொழிலின் நிமித்தம் பல ஊர்களுக்குச் செல்வதால் வீட்டில் தங்குவது குறைவு. (அ 31)

## உதயன்

### உள்ளூர எழும் அச்சம்

இலங்கை அரசாங்கத்துக்குச் சீனா ஆயுதங்களை விற்பது குறித்து இந்தியா ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. ஆனால் சீனா அதனை நிராகரித்துவிட்டது.

எம்.பி. பதவியை இழந்தும், அமைச்சராக ஒட்டிக்கொண்டிருக்கும் வெளியுறவு மந்திரி சுக்லா இலங்கைக்கு வந்த கையோடு பீஜிங்கிற்கும் சென்றுள்ளார்.

அதன் பின்னர் இலங்கையைத் தொடர்புபடுத்தி இந்தியத் தரப்பில் எழுப்பப்பட்டிருக்கும் ஆட்சேபம் நிச்சயமாக ஒரு குழப்ப நிலையை — ஏன், எதற்காக — என்ற மயக்கத்தை உண்டாக்கும்.

இந்தியாவில் இப்போது காங்கிரஸின் பின்னால் நின்று ஆட்சி நடத்துபவர் ராஜீவ் காந்தி. அவரின் நிபந்தனைகளையும், உத்தரவுகளையும் ஏற்று நடைமுறைப்படுத்தும் பொம்மை, பிரதமர் சந்திரசேகர். இது உலகம் அறிந்த உண்மை.

இலங்கை விவகாரத்தில் உண்மையான நண்பர்கள் தமிழர்களே என்பதை நிராகரித்து, சிங்கள அரசுக்கு உதவியவர் ராஜீவ். தான் பகைவர்களாகக் கருதும் சீனா, பாகிஸ்தானுடன் கொழும்பு அரசு ஒட்டி உறவாடுவது தெரிந்தும், அதனைத் தனது பக்கம் திருப்புவதற்காக, தாஜா பண்ணுவதற்காக, தமிழர் நலனை விற்று கொழும்புக்கு உதவியவர்.

எனினும் கொழும்போ தான் சீனா, பாகிஸ்தானிடம் வைத்த பற்றையும், பாசத்தையும், நீக்குவதாக இல்லை.

இது தனக்கு எப்போதும் ஆபத்தானது என்பதை உணர்ந்து, தானே விரலைத் திருப்ப, ஈழப் போராளிகளுக்கு கருணாநிதி ஆதரவளிப்பதாகக் கூறி, அவரைப் பதவியில் இருந்து இறக்கி, தான் கொழும்பின் தோழனே என்பதை மிகைபட உண்மையில் எடுத்துக் காட்டினார் ராஜீவ்.

எனினும் கொழும்பு - சீன உள்ளுறவு அவருக்கு உள்ளூரப் பயத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் பிரதிபலிப்பே சீனாவைக் கடிந்து கொள்வது எனலாம்.

இந்து சமுத்திரப் பிரதேசத்தில் தானே தலையாரியாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையுள்ள இந்தியாவுக்கு, சீனாவோ பாகிஸ்தானோ அந்த இடத்தை அடைந்துவிட இடமளிக்கக் கூடாது என்பதில் மிக்கூடிய கவனம் உண்டு என்பது நன்றாகப் புலனாகிறது.

அதன் ஓர் அம்சமே, கொழும்பை எல்லை கடந்து, அளவுக்கு அதிகமாக "தலைக்கு மேல் தூக்கி வைத்தும்" இந்திய முயற்சி.

வளைகுடாப் போரில் அமெரிக்கா அணு ஆயுதங்களைப் பாவித்தால், இந்தியாவும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்கும் — என்ற முழங்காலுக்கும், மொட்டந்தலைக்கும் முடிச்சுப்போடும் போக்கும் சட்டாம்பிளைப் பதவியை யாரும் பறித்துவிட இடமளிக்கக்கூடாது என்ற அக்கறையின் மற்றோர் அம்சமே. பாகிஸ்தான் தனது அணு ஆயுத பலத்தால் ஓட்டப் போட்டியில் முந்திவிடக் கூடாது என்ற முனைப்பினாலேயே இந்தியா தனது உள்ளத்தில் உறைந்து கிடந்ததை உருக்கிக் காட்டி இருக்கிறது.

# புகை படிந்த ஓவியமாக்கப்பட்டது வல்வை

வல்வைப் புயல் பகுதி மூன்று

வல்வை ந. அனந்தராஜ்

அங்கு நின்றவர்களை ஆறுதல்படுத்திக் கொண்டிருக்க, இன்னுமொரு விமானம் நாங்கள் நின்ற கட்டடத்தின் வடமேற்கு மூலையில் சுமார் 75 மீற்றர் தூரத்தில் உள்ள நடராஜா அதிபர் அவர்களின் வீட்டின்மேல் குண்டுகளைத் தள்ளியதும், பேரிரைச்சலுடன் விழுந்து வெடித்தது.

அந்த அதிர்ச்சியில் அங்கு பதறிக்கொண்டு நின்ற மாணவிகளின் கைகளில் இருந்த புத்தகங்கள், கொப்பிகள் எல்லாம் வீசி எறியப்பட்டன. கதவு, ஜன்னல் கண்ணாடிகள் 'கலீர்... கலீர்...' என்று நொருங்கிச் சிதறிக்கொண்டிருந்தன.

எங்கும் ஒரே புகைமண்டலம்!... வெடி மருந்தின் நாற்றம் மூக்கைத் துளைத்தது...

தொடர்ந்தும் வானத்தில் விமானங்களின் பேரிரைச்சல் ஆகாயத்தைப் பிளப்பது போல இருந்தது! நான்கு குண்டுவீச்சு விமானங்களுடன், இரண்டு [illegible] [illegible] குண்டுகளைப் போடத் தொடங்கி விட்டன!

தேவாலயத்தின் மீது! கண் இமைக்கும் நேரத்திற்குள் ஒரு பொம்மர் — நாங்கள் நின்ற கட்டடத்தின் தென் மேற்குப் பகுதியில் 50 மீற்றர் தூரத்தில் உள்ள புனித செபஸ்தியார் தேவாலயத்தின் மேல் குண்டு ஒன்றைத் தள்ளியதும், அது கோவிலின் முன்னால் விழுந்து வெடித்துச் சிதறியது. அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து, அந்தச் சுற்றாடல் எங்கும் கற்களும், மணலும் பெரும் விசையுடன் வீசி எறியப்பட்டன!

அதற்கு மேலும் அந்தக் கட்டடத்தில் நிற்பது ஆபத்து என்பதை உணர்ந்தேன்.

"பிள்ளைகள்...! இனி இங்கை நிற்க வேண்டாம்... இவங்கள் அடுத்த குண்டு இந்தக் கட்டடத்திலேயே போடக் கூடும்... உடனடியாகப் பின்புற வாசல் வழியாகப் போய் அடுத்த காணிக்குப் போவம்..."

[illegible]

வாசல் வழியாகப் புண்ணியமூர்த்தி என்பவரின் வளவையும் தாண்டி, அதற்கு முன்னால் உள்ள சிறிய சந்தியை அடையவும் எங்களுடைய தலைக்குமேல் அந்த [illegible] விமானம் பேரிரைச்சலுடன் உறுமியபடி பறந்தது. உடனடியாக அவர்களை, காதுகளை மூடியபடி கீழே விழுந்து படுக்குமாறு பணித்துவிட்டு, நானும் சேர்ந்து கீழே படுத்தேன்.

அந்த ஒரு விநாடிக்குள், இரத்தமே உறைவது போன்று... வானமே இடிந்து விழுவது போல பேரிரைச்சலுடன் வை-12 விமானத்தில் இருந்து 350 கிலோ [illegible] நிறையுள்ள குண்டு ஒன்று மறுதெருவில் உயர்ந்த மாடிக் கட்டடத்தின்மீது. நாங்கள் நின்ற அந்த இடத்தில் விழுந்து வெடித்ததும் [illegible] இலைத் துண்டுகளும் வீசி எறியப்பட்டன...

### புகைபடிந்த ஓவியமாகியது

அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து, பிரமாண்டமான அந்த மாடிக் கட்டடம், சரிந்து விழுந்து கொண்டிருந்தது.

அதன் அருகே இருந்த தனிச் சக்கரவண்டிகள் துண்டு துண்டாக்கப்பட்டு வீசி எறியப்பட்டன!

பெரிய கற்தூண்களும், உடைந்து சிதறிய கலுமினியத் துண்டுகளும் மரக்கிளைகளும், வளவின் நாலாபுறத்திலும் சிதறிக் காணப்பட்டன.

ஆ!... ஸ்ரீலங்கா அரசின் வெறித்தனத்தின் சின்னமாக அந்த மாடிக்கட்டடம் சரிந்து போய்க் கிடந்தது.

ஸ்ரீலங்கா வான் படையின் விமானங்கள் தொடர்ந்தும் அங்கிங்கெனாதபடி குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தன.

வானமெங்கும் ஒரே புகைமண்டலமாகி, வல்வை நகரம் புகைபடிந்த ஓவியம் போல ஆகிவிட்டது!

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் க. விநாயகம்பிள்ளை
B Sc, Dip in Ed
(ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

அமரர் கணபதிப்பிள்ளை விநாயகம்பிள்ளை ஆசிரியர் 11-02-1991 இல் காலமானார். அன்னார் முன்னாள் யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியரும், 01-01-1976 முதல் இன்றைய வரை யாழ்/ ஹாட்லிக் கல்லூரியின் பிரபல இரசாயனவியல் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், கடமையாற்றினார். அன்னாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகிறோம். ஆறாத துன்பத்தால் வருந்துகிறோம். எமது கண்ணீர் அஞ்சலியை அவரின் பாதங்களுக்குச் செலுத்துகிறோம் அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினர், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்

ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை. (15840)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சின்னத்தம்பி

நுணாவில் கிழக்கு சாவகச்சேரி காலஞ்சென்ற சி. கந்தையாவினதும், திருமதி சின்னம்மா கந்தையாவினதும் அன்பு மகன் சின்னத்தம்பி - (வவுனியா நெல் சந்தைப்படுத்தும் சபை, களஞ்சியப் பொறுப்பாளர், கோல்டன் மில் பங்காளர்) 1991-02-10 ஆம் திகதி இறையடி சேர்ந்தார். இவர் ஜெயகௌரியின் அன்புக் கணவரும், சிவசங்கர், சிவதாஸினி, கௌரிசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசிங்கம் (மின்சாரசபை சுன்னாகம்), குணசிங்கம், சிவபாக்கியம், புஸ்பரத்தினம், ஜீவா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், P R ஜெயரட்ணம் (முன்னைநாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்), நாகம்மா ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயக்குமார், ஜெயச்சந்திரன் (அமெரிக்கா), ஜெயதாசன், ரவீந்திரன் (அமெரிக்கா), ஜெயசோதி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியை 14-02-1991 வியாழன் பி. ப. 5 மணிக்கு சாவகச்சேரியில் இடம்பெற்றது என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
இரத்தினம் இலங்கேசன்,
(மருமகன்)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. [14920]

## திருமதி புவனேஸ்வரி அரியராஜா
(ஆசிரியை, தாவடி இந்துக் கலவன் பாடசாலை)

திருமதி புவனேஸ்வரி அரியராஜா (ஆசிரியை) தாவடி இந்துக் கலவன் பாடசாலை) 14-2-1991ல் காலமானார். இவர் ச. அரியராஜா (கொமசல் மனேஜர் ப. நோ. கூ. சங்கம், சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும், அ. ஜெயந்தனின் (லண்டன்) தாயாரும், திரு. திருமதி தம்பித்துரை தம்பதிகளின் மகளும், தனபாலசிங்கம் (குடிசன மதிப்பீட்டு புள்ளி வரவிலாக்கா கொழும்பு), பாலச்சந்திரன் (சேவையர், மன்னார்), பரமேஸ்வரி, தங்கேஸ்வரியின் சகோதரியும், கணேசரத்தினம், செல்வராஜா (உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் நல்லூர்), மகேஸ்வரன் (சுவிஸ்), திருமதி தர்மலிங்கம், திருமதி சண்முகநாதன், திருமதி தெட்சணாமூர்த்தி (நீதிமன்றம், மன்னார்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

-குடும்பத்தினர்.

தாவடி தெற்கு,
கொக்குவில். [15846]

## மயிலு வீரகத்தி

கரவெட்டி மேற்கு ஆனைப்பந்திசைச் சேர்ந்த மயிலு வீரகத்தி (இளைப்பாறிய அதிபர்) நேற்றுக் காலமானார். அன்னார் பாக்கியத்தின் அன்புக்கணவரும் சின்னப்பிள்ளை, ஈஸ்வரி பொன்னாச்சி, காலஞ்சென்ற சின்னத்துரை வல்லிபுரம் ஆகியோரின் சகோதரரும் திலகவதி (கனடா), மனோகரன் (இந்தியா) ஆகியோரின் தந்தையும், கனகசபையின் (இந்தியா), மாமனாரும் இந்திரா, காந்தன் (ஜேர்மனி), அம்பிகாபதி (கனடா), விஜயந்தி (நோர்வே), உமாகாந்தன் (இந்தியா) ஆகியோரின் பேரனுமாவர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-2-91 காலை 10 00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
தி. நித்தியானந்தன்.

கரவெட்டி. [15441]

# இன்று பதவியேற்பு

சென்னை, பெப் 15

தமிழ்நாடு மாநிலத்தின் புதிய ஆளுநராக திரு. பீஷ்மன் நாராயணசிங் இன்று பதவி ஏற்கிறார்.

இவர் இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்த சமயம் மத்திய அமைச்சராகப் பணியாற்றியவர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ-எ)

# சந்திப்பு

சென்னை, பெப் 15

பதவி விலகிய ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலாவை அவர் தமிழகத்திலிருந்து புதுடில்லி புறப்படுவதற்கு முன்ன, முன்னர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கும் நேற்று சென்னையில் சந்தித்துப் பேசினார்கள். (ஏ-எ)

# பிரிட்டன் பலத்த கண்டனம்

பக்தாத்தில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த பாதாள நிலவறை ஒன்றின் மீது பன்னாட்டுப் படைப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதல் மிகமோசமான தவறு என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரத்துக்கு அதிகமானோர் மாண்டுபோய்விட்டனர் என்பது தெரிந்ததே.

மிகவும் துக்ககரமான சம்பவம் என்று அதனை வர்ணித்த பிரிட்டன், அந்த விமானத் தாக்குதல் நடவடிக்கையில் பிரிட்டிஷ் விமான ஓட்டிகளோ, பிரிட்டிஷ் போர் விமானங்களோ சம்பந்தப்படவில்லை என்றும் அறிவித்துள்ளது.

## யாழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய ஏற்பாட்டினால் 1989 ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான வெட்டுப் புள்ளி (Cut-out marks) நிலை வீழ்ச்சியடையும் என அறிய வருகிறது.

இதன்படி முன்னர் அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளி நிலையிலும் பார்க்க குறைந்த புள்ளி எடுத்தோருக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்க விருக்கிறது.

கடந்த கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு 868 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை மேலும் இருமடங்கு விகிதத்தினால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அதிகரிப்பின்படி இம்முறை ஆயிரத்து 47 மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவார்கள்.

கொழும்பு சென்று திரும்பிய யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். (உ-3)

## ஈழப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலங்களில் இயங்கும் தீவிரவாத சக்திகளை ஈழப்போராளிகளுடன் ஒப்பிட முடியாது. ஈழப் போராளிகள் வெளிநாட்டுச் சக்திகள்'' — என்றார் அவர்.

அமைச்சராவதற்கு முன்னர் திரு. சுப்பிரமணியசுவாமி ஈழ விடுதலைப் போராட்டத்துக்குக் குரல் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக மீனவருடன் கச்சதீவில் வந்திறங்கப்போவதாக [illegible] வகையில் முன்னர் அவர் அறிவிப்பு விடுத்திருந்தார். (உ-3)

# தியாகசீலம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

1987 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி கைதடியில் வெடி விபத்துச்சம்பவத்தில் வீரமரணமடைந்த போராளிகளின் நினைவாக நேற்று மாலை 6-45 மணியளவில் மானிப்பாயில் தியாகசீலம் திறந்து வைக்கப்பட்டது.

தியாகசீலத்தில்— நிறுவர் பூங்கா, மிருகங்கள், பறவைகளின் சரணாலயம், வாசிகசாலை என்பன அடங்கியுள்ளன.

திறப்பு விழா வைபவத்தில் பெருந் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலரும் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றினர். விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. மைப் தியாகசீலத்தை திறந்து வைத்தார்.

விடுதலைப்புலிகள் பிரமுகர்களான ஐயர், கௌரி, பரா, ஆஞ்சநேயர் உட்பட மற்றும் பலர் வைபவத்தில் உரையாற்றினர்.

கைதடியில் வீரமரணமடைந்த போராளிகளின் 4 ஆவது நினைவுநாள் நேற்றாகும். (ஓ)

# வளைகுடா போர் நிலைவரம்:

# ஐ. நா. பாதுகாப்பு சபை இரகசியமாக ஆராயும்

வளைகுடா யுத்தத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபை இரகசியமாக ஆராய்வது என்று நேற்று தீர்மானித்தது. இதுபற்றி பகிரங்க விவாதம் நடத்தவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை 10—2 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

15 உறுப்பினர் சபையில் ஜேர்மனும் கியூபாவும் பகிரங்க விவாதம் வேண்டும் என்று கோரின.

இந்தியா, ஈகுவடார், சீனா ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. (ஓ-எ)

# வழங்கப்பட்டவை 4 ஆயிரம்:

# 283 துப்பாக்கிகளே மீள ஒப்படைப்பு!

கொழும்பு, பெப் 15

அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட 3 ஆயிரத்து 992 துப்பாக்கிகளில் ஆக 283 துப்பாக்கிகளே திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று அறிவித்தார்.

# பிரிவினை உருவாக கலைப்பு வழி செய்யும்

## வி. பி. சிங் எச்சரிக்கை

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழக அரசை கலைத்ததன் மூலம் மக்களிடையே பிரிவினைவாத சக்தியை வளர்க்கும் நிலையை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இந்திய முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

தமிழக அரசு கலைப்புக்கு எதிராக முழு அளவிலான பிரச்சாரத்தை நாடு முழுவதும் தேசிய முன்னணி நடத்தும் என்றும் வி. பி. சிங் சொன்னார். (ஓ-3)

# 208 கிலோ தங்கத்தை இந்தியா மீளப் பெறும்

மாட்ரிட், பெப். 15

208 கிலோ தங்கத்தை இந்தியாவிடம் திருப்பி ஒப்படைக்க போர்த்துக்கல் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

கோவா மாநிலம் போர்த்துக்கல் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது, மாநிலத்தில் இருந்து இத் தங்கத்தை போர்த்துக்கல் அரசு எடுத்துச் சென்றது.

1961 இல் கோவா போர்த்துக்கல்லின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டு இந்தியாவுடன் சேர்க்கப்பட்டபோது இத் தங்கத்தைத் திருப்பி ஒப்படைக்க போர்த்துக்கல் அரசு மறுத்து வந்தது.

# மரண அறிவித்தல்

## இரத்தினம் வேலாயுதபிள்ளை
(V. G S. கொம்பனி பங்காளர்)

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வதிவிடமாகக் கொண்டவருமான இரத்தினம் வேலாயுதபிள்ளை 10-02-1991 இல் தோணிக்கமோட்டை வவுனியாவில் இடம்பெற்ற வன்செயலில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் புதல்வரும், இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்சன், தட்சாயினி, தனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், குளப்பிட்டி பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற நாராயணபிள்ளையின் மருமகனும், செல்லத்துரை இராசலட்சுமி, புரந்திரதாசன் சிவராசமலர், நிர்மலானந்தன் யோகராணி, பரமேஸ்வரன் (கனடா), வசந்தரூபி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவர்

அன்னாரின் தகனக்கிரியை 11-02 1991 இல் தோணிக்கமோட்டையில் நடைபெற்றது.

தகவல்:
மனைவி

[15843]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org